

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
JurongHealth
SingHealth

SINGHEALTH / PIL / T117R0

நோயாளி தகவல் கையேடு

# ஸ்டெராய்டு-அல்லாத அழற்சி-எதிர்ப்பு மருந்துகள்

## (NON-STEROIDAL ANTI-INFLAMMATORY DRUGS -NSAIDs)

டைக்ளோஃபெனெக் **(Diclofenac)** இபுப்ரோஃபென் (Ibuprofen)
இன்டோமீத்தசின் (Indomethacin) கீட்டோப்ரோஃபென் (Ketoprofen)
மெஃபெனாமிக் அமிலம் (Mefenamic Acid) நப்ராக்ஸென் (Naproxen)
பைராக்சிகம் (Piroxicam) மெலோக்சிகம் (Meloxicam)
செலகாக்சிப் (Celecoxib) எடோரிகாக்சிப் (Etoricoxib)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

இந்த மருந்து, வலி மற்றும் அழற்சிக்கு (வீக்கத்திற்கு) சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது. முடக்கு வாதம், முதுமை மூட்டழற்சி போன்ற அழற்சிக் கோளாறுகளிலும் இது பயன்படுத்தப்படுகிறது.

இந்த மருந்து புராஸ்டாகிளான்டின்ஸ் (prostaglandins) என்னும் இரசாயனங்கள் உடலில் உற்பத்தியாவதைத் தடுக்கிறது. நம் உடலில் காயம் ஏற்படும்போது இந்த இரசாயனங்கள் உற்பத்தியாகி, வலியையும் வீக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. இவற்றின் உற்பத்தியைக் குறைக்கும்போது அவற்றின் பாதிப்புகளும் குறைகின்றன. ஆனால், இந்த இரசாயனங்கள் இரைப்பைப் பிரச்சினைகளுக்கு எதிராகப் பாதுகாப்பு தருகின்றன. எனவே, ஸ்டெராய்டு-அல்லாத அழற்சி-எதிர்ப்பு மருந்துகளை எடுக்கும்போது, செரிமானமின்மை, வயிற்றுப் புண்கள், இரைப்பையில் இரத்தப்போக்கு போன்ற பக்க-விளைவுகள் ஏற்படலாம்.

எனினும், இந்த மருந்துகளின் புது வகைகளான COX -2 மருந்துகள் (எ.கா. செலகாக்சிப், எடோரிகாக்சிப்), புராஸ்டாகிளான்டின்ஸ் இரசாயனங்களில் "zbfci" தருவனவற்றை மட்டும் தடுக்கின்றன ஆனால் இரைப்பையைப் பாதுகாக்கும் இரசாயனங்களை விட்டுவிடுகின்றன. இதனால், இரைப்பையில் ஏற்படும் பக்க-விளைவுகள் குறைகின்றன.

## இந்த மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

அழற்சியின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

இரைப்பை பாதிக்காமலிருக்க, இந்த மருந்தை உணவுடன் அல்லது உணவு உண்டு முடித்தவுடன் உட்கொள்ளலாம். COX -2 மருந்துகளை உணவுடனோ அல்லது வெறும் வயிற்றிலோ எடுக்கலாம்..

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்து உட்கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

சாதாரணமாக, பின்வரும் பக்க-விளைவுகள் ஏற்படலாம் :

- இரைப்பை-சிறுகுடல் அசௌகரியம்
- ஒவ்வாமைப் பாதிப்புகள்
- குமட்டல்
- வயிற்றுப்போக்கு
- இரைப்பைப் புண்கள்
- தலைவலி
- தலைச் சுற்றல்
- காது கேட்டல் பிரச்சினைகள்.

சிலருக்கு உடலில் நீர் தேங்கலாம் மற்றும் இரத்த அழுத்தம் அதிகரிக்கலாம். இந்த மருந்துகள் இரத்தம் உறைவதைப் பாதிக்கலாம் மற்றும் ஆஸ்துமா நோயை மோசமாக்கலாம். உங்களுக்குப் பக்க-விளைவுகள் ஏற்பட்டால் மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

மருந்து எடுப்பதற்கு முன்னால், பின்வருவனவற்றை மருத்துவரிடம் தெரிவியுங்கள்:
எந்த மருந்துக்காவது ஒவ்வாமை இருத்தல்.

- கர்ப்பமாக இருத்தல் அல்லது கர்ப்பமடையத் திட்டமிடுதல்
- தாய்ப்பால் கொடுத்தல்.
- இரைப்பை அல்லது சிறுகுடல் புண்கள் ஏற்பட்டிருத்தல்.
- இரத்த அடர்த்தியைக் குறைக்கும் மருந்துகளை உட்கொண்டு வருதல் (எ.கா. ஆஸ்பிரின், வார்ஃபரின் ).
- இரத்தம் உறைதலில் கோளாறு இருத்தல்.
- சிறுநீரக, இருதய அல்லது கல்லீரல் பிரச்சினைகள் இருத்தல்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்தைக் குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.